1986 நவம்பர் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

மந்தைவெளி பேருந்து நிலையத்திலிருந்து பட்டினப்பாக்கம் செல்லும் வழியிலுள்ள இராமகிருஷ்ணா மடம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் தெற்கு ஓடைக்கரைச் சாலையில், தண்ணீர் தேங்குவதற்குக் காரணம் ஓசியானிக் குப்பைத் திடலில் உள்ள பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான நிலத்தின் வழியாக தண்ணீர் வடிந்து செல்வதற்கு வசதியாக வாய்க்கால் வெட்டப் படாமல் இருப்பதாகும். இதற்காகச் சென்னை மாநகராட்சி சென்ற ஒரு வருட காலமாகப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் அனுமதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. சென்னை மாநகராட்சி ரூ. 1.30 இலட்சம் செலவில் தெற்கு ஓடைக் கரைச் சாலையில் மழைநீர் வடிகால்களை ஏற்கனவே வெட்டி யுள்ளது. இது போக 4 அடி அகலமும், 4 அடி உயரமும் உடைய நான்கு தரை பாலங்கள் இந்த சாலையில் குறுக்காக ரூ 1.15 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. இந்த சிறு பாலங்கள், ஓசியானிக் குப்பைத் திடலில், சாலையின் இரு மருங்கிலும் உள்ள மழைநீர் வடிகால்களை இணைக்கின்றன. பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான இடத்திற்கப்பால் அடையாறு உப்பங்கழியுடன் சென்று சேரும் இயற்கையான உப்பங்கழி வாய்க்கால் ஒன்று உள்ளது. சாலையின் ஓரத்தில் உள்ள மழைநீர் வடிகால்களை இந்த உப்பங்கழி வாய்க்காலுடன் சேர்ப்பதற்கு இடையிலுள்ள பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான பூமியில், மழைநீர் வடிகால்களை சென்னை மாநகராட்சி அமைப்பதற்கு அக்கழகம் 19-11-86 அன்று கூட்டாய்விற்குப் பின்பு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, தண்ணீர் எளிதில் வடிந்து செல்வதற்கு ஏற்ற வகையில், சாலை யின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்களிலிருந்து அடையாறு உப்பங்கழிவரை பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பூமியில். சென்னை மாநகராட்சி வடிகால்களை விரைவில் அமைக்கும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(இஇ) கோவை மாவட்டத்தில் சில எஞ்சினியரிங் மற்றும் பனியன் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. சுப்ப ராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட பொறியியல் மற்றும் பனியன் தொழிற்சாலைகளில் போனஸ் பிரச்சினை குறித்து தற்பொழுது நடைபெற்று வரும் வேலை நிறுத்தம் பற்றிய குறிப்புகள் கீழ்வருமாறு :

கோவை லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் லிமிடெட் :

கோவை, பெரியநாய்க்கன்பாளையத்தில் உள்ள லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் யூனிட்-1 என்னும் நிறுவனத்தில் பணிபுரியும் சுமார் 3,134 தொழிலாளர்கள் 1985–86 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சினையில் 27-10-1986 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிறுவனத்தில் ஐ.என்.டி.யு.சி., டி.என்.டி.யு.சி., தொ.மு.ச.பே., எ.டி.பி., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி.; மற்றும் எச்.எம்.எஸ். லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்கள் இயங்குகின்றன.

இந்த தொழிற்தகராறில் கோவை, தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப் பட்டன. இந்தப் பேச்சுவார்த்தையின் ஆரம்பக்கட்டத்தில் தொழிற்சங்கங்களின் தரப்பில் 30% போனசும் ரூ. 200/– கருணைத் தொகையும் கேட்கப்பட்டது. நிர்வாகத் தரப்பில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அடிப்படையில் ஒரு நீண்ட கால ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. கடைசியாக நடந்த பேச்சு வார்த்தைகளின் போது தொழிற்சங்கங்களின் தரப்பில் 30% போனஸ் அளிக்கப் பட வேண்டுமென்று கோரப்பட்டது. நிர்வாகத் தரப்பில் 13.25%க்கு மேல் அளிக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் கோவை, தொழிலாளர் துறை இணை ஆணையரால் ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் பற்றிய அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. வேலை நிறுத்தம் அமைதியாக தொடர்ந்து நடைபெறுகிறது.

சுப்பையா பவுண்டரி, கோவை :

கோவை, சுப்பையா பவுண்டரி என்ற நிறுவனத்தில் சுமார் 120 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். 1985-86 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சனையை முன்வைத்து 28-10-1986 முதல் அனைத்து தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். தொழிலாளர்கள் தேசிய இன்ஜினியரிங் தொழிலாளர் சங்கம் மற்றும் கோவை ஜில்லா இன்ஜினியரிங் மற்றும் மெக்கானிக்கல் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். இப்பிரச்சனையில்

கோவை, 3-வது தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) தலையிட்டு பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார். பேச்சு வார்த்தைகளின் மூலம் ஒரு சுமூக முடிவு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது வேலை நிறுத்தம் அமைதியாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

புளூ மவுண்ட் செராமிக்ஸ், கோவை :

கோவையிலுள்ள புளூ மவுண்ட் செராமிக்ஸ் என்ற நிறுவனத்தில் சுமார் 130 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். கோவை மாவட்ட பொறியியல் பொதுத் தொழிலாளர் சங்கம் என்ற தொழிற் சங்கத்தில் தொழிலாளர்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். 1985–86 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சினையை முன்வைத்து 27-10-1986 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இப்பிரச்சினையில் கோவை 3-வது தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) முன்பு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது. பேச்சு வார்த்தைகளின் மூலம் ஒரு சுமூக தீர்வு காண தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது வேலை நிறுத்தம் தொடர்ந்து அமைதியாக நடைபெறுகிறது.

பனியன் தொழிலாளர்களின் வேலை நிறுத்த பிரச்சினை :

திருப்பூரிலுள்ள பனியன் தொழிலாளர்களுக்கான 1985-86 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சினை இரு தரப்பினருக்குமிடையில் நிறுவன மட்டத்தில் (Unit-wise) நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டுவிட்டது ஆனால் கிரிஸ்டல் குரூப் நிறுவனங்களைச் சார்ந்த கீழ்க்கண்ட நான்கு நிறுவனங்களில் மட்டும் போனஸ் பிரச்சினையில் ஒரு உடன்பாடு ஏற்படாததால் அந்நிறுவனங்களைச் சார்ந்த சுமார் 493 தொழிலாளர்கள் 27-10-1986 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(1) ஸ்ரீ பிரகாஷ் அண்டு கம்பெனி;

(2) சத்தியப்பிரியா அண்டு கம்பெனி;

(3) கிரிஸ்டல் கார்மெண்ட்ஸ்;

(4) கிரிஸ்டல் நிட்டர்ஸ்.

இத்தொழிலாளர்கள் பனியன் மற்றும் பொதுத்தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு.), பனியன் பாக்டரி. லேபர் யூனியன் (ஏ.ஐ.டி.யு.சி.), பனியன் அண்ணா தொழிலாளர் சங்கம் (அ.தொ ச.பே.), பனியன் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தொ.மு.ச.பே.), ஆகிய தொழிற்சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். இப்பிரச்சனையில் கோவை, தொழிலாளர் துறை துணை ஆணையர் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டுள்ளார். பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒரு சுமூக தீர்வு காண தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வேலை நிறுத்தம் நீடிக்கிறது. நிலைமை அமைதியாக உள்ளது.